கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2001 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 10.12.2012

## புலிகளின் வதை முகாமில் எனது அனுபவம் - தொடர் - 77

மேலும் சில தோழர்கள் வந்து சேர்ந்தனர்!

என் மீதான விசாரணைகள் பல விதங்களிலும் கோணங்களிலும் நடைபெற்று வந்தாலும், புலிகள் என்னைக் கைது செய்ததிற்கான பிரதான காரணம் என்ன என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனது அரசியல் நிலைப்பாடுதான் அவர்கள் என்னைக் கைது செய்ததிற்கான காரணமாக இருப்பின், அவர்கள் என்னை எப்பொழுதோ கைது செய்திருக்க வேண்டும். அதை அடிப்படையாக வைத்து அவர்கள் என்னைக் கைது செய்திருந்தாலும், அதை ஒரு காரணமாக அவர்களால் வெளிப்படையாகக் கூற முடியாது. எனவே என்னைக் கைது செய்ததிற்குக் காரணமாக, அவர்களுக்கு வசதியான ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அது என்ன என்பதுதான் எனது மூளையைச் சர்வசதா குடைந்து கொண்டிருந்தது.

அத்துடன் எனது அரசியல் கொள்கைகள்தான் என்னைக் கைது செய்ததிற்குக் காரணமாக இருப்பின், எமது மார்க்சிச - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏனையோரையும் கைது செய்திருக்க வேண்டும். இனப் பிரச்சினை தீவிரமடைந்து, தமிழ் இளைஞர்களின் பல்வேறு ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவாகி, யுத்தம் ஆரம்பமாகிய பின்னர், எமது கட்சியைச் சேர்ந்த பலர் பல்வேறு இயக்கங்களுடன் இணைந்து செயல்பட ஆரம்பித்திருந்தனர். அவர்களில் புலிகள் இயக்கத்தில் இணைந்தவர்கள் தவிர, ஏனைய இயக்கங்களில் இணைந்தோர் பாதுகாப்புக் காரணமாக வடக்கு கிழக்கை விட்டு வெளியேறித் தென்னிலங்கைக்கோ, இந்தியாவுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ சென்றுவிட்டனர்.

அவர்கள் தவிர, எமது கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (என்.எல்.எப்.ரி) எனப் பெயர் மாற்றம் செய்து அதையும் ஒரு ஆயுதப் போராட்ட இயக்கமாக்கிச் செயற்பட்டவர்களும் பெரும்பாலும் வடக்கை விட்டு வெளியேறி விட்டனர். அவர்களுடன் இணைந்து மறைமுகமாகச் செயற்பட்ட எமது கட்சியின் உறுப்பினர்கள் சிலர், என்னைப் போலவே புலிகளால் தமக்குப் பிரச்சினைகள் எதுவும் வராது என எண்ணிக் கொண்டு தமது சொந்தப் பிரதேசங்களில் தங்கி இருந்தனர். ஆனால் மற்றைய போலல்லாது, எந்தவிதமான இயக்கங்களுடனும் தொடர்புபடாத நான் மட்டும் கைது செய்யப்பட்டிருப்பது ஏன் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.இந்தச் சூழ்நிலையில்தான் ஒரு நாள் ஒரு திடீர் நிகழ்ச்சி நடந்தது. அதன் பின்னர்தான் சில விடயங்கள் எனக்குப் புரிய ஆரம்பித்தது.

ஒருநாள் அதிகாலை சரியாகப் பொழுது புலர்வதற்கு முன்னர், சில கைதிகள் நித்திரை விட்டு எழுந்து முகம் கழுவும் சம்பிரதாயத்தை மேற்கொள்வதற்கு ஆயத்தமானோம். அப்பொழுது எனக்கு அருகில் இருவர் வந்து நின்று என்னையே உற்றுப் பார்ப்பதை அவதானித்தேன். நான் உடனடியாகவே அவர்களை அடையாளம் கண்டு கொண்டேன். ஒருவர் நீண்டகாலமாக எமது கட்சியின் முழுநேர ஊழியராகச் செயற்பட்ட இரத்தினம' என அழைக்கப்படும் முரசுமோட்டையைச் சேர்ந்த இராசரத்தினம். மற்றைய இளைஞர் விசுவமடுவில் பெரிய அளவில் விவசாயம் செய்து வந்த இராசமூர்த்தி என்ற ஒரு தோழரின் மகன்.

வடமராட்சியைச் சேர்ந்த தோழர் இரத்தினம் கட்சியுடன் இணைந்ததுடன் நின்றுவிடாது, முழுநேர ஊழியராகச் செயற்படும் எண்ணத்துடன் கிளிநொச்சிக்கு வந்து எமது அக்கிராயன் - கோணாவில் அரசியல் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றதுடன், முரசுமோட்டைப் பகுதியில் கட்சி பணிகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டு வந்தவர். இனப் பிரச்சினை யுத்தமாக மாறி, எமது கட்சி ஸ்தம்பித நிலையை அடைந்த பின்னர், என்.எல்.எப்.ரி இயக்கத்திற்குள் பிளவு ஏற்பட்டு, தோழர் விசுவானந்ததேவன் தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (பி.எல்.எப்.ரி)யுடன் இணைந்து செயற்பட்டு வந்தார். அந்த அணியினர் விசுவமடுவில் மண்டைதீவைச் சேர்ந்த எமது இன்னொரு தோழரான முத்துலிங்கம் (இவர் புலிகளுடனான அரசாங்கத்தின் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் மனைவியுடன் தங்கி இருந்த போது எறிகணை வீச்சில் மரணமடைந்துவிட்டார்) என்பவரின் காணியில் உருவாக்கியிருந்த பண்ணைக்குப் பொறுப்பாக இருந்தார்.

தோழர் இரத்தினத்துடன் வந்த இளைஞரின் தந்தையாரான தோழர் இராசமூர்த்தியும் வடமராட்சியைச் சேர்ந்தவர்தான். அவர் விசுவமடுவில் 1965 - 70 காலகட்டத்தில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசால் உருவாக்கப்பட்டிருந்த விவசாயப் படையில் சேர்ந்து செயற்பட்டுவிட்டு, பின்னர் அது கலைக்கப்பட்டதும் விசுவமடுவில் சிறிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டு, பின்னர் பல ஏக்கர்களில் விவசாயம் செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டவர். ஒரு மகனையும், மகளையும் கொண்ட குடும்பம் அவரது. மகனை புலிகள் தமது இயக்கத்துக்குப் பிடித்துச் சென்றுவிட்டனர். புலிகள் இயக்கத்தில் ஒருசில முக்கியஸ்தர்களுடன் தனக்கு இருந்த தொடர்பைப் பயன்படுத்தித் தனது மகனை மீட்க அவர் எடுத்த முயற்சி பலனளிக்காததால், புலிகளின் முகாம் ஒன்றுக்கு முன்னால் சத்தியாக்கிரகம் கூட செய்து பார்த்தவர்.

இப்பொழுது தோழர் இரத்தினமும், தோழர் இராசமூர்த்தியின் மகனும் சிறைக்கு எதற்காக அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியாத புதிராக இருந்தது. சில வேளைகளில் இரத்தினம் அவரது பி.எல்.எப்.ரி தொடர்பு காரணமாகக் கைது செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் இயக்கத்தில் குறிப்பிட்ட ஒரு காலமாக இருந்து வரும் இராசமூர்த்தியின் மகன் எதற்காக சிறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார் என்பது மர்மமாக இருந்தது. அவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டிருப்பதற்கான காரணம் என்னவென்பதை அவர்களிடம் கேட்கவும் முடியாது.

அவர்களுடன் கதைத்தாலே எனக்கு மிக மோசமான தண்டனை கிடைக்கும். அவர்கள் இருவரும் மிரட்சியுடன் காணப்பட்டாலும், என்னைக் கண்டதும் சற்று உற்சாகம் அடைந்தவர்களாக இருந்தனர். நான் அவர்களுக்கு மிக அருகில் சென்று, அங்கிருந்த மற்றவர்களுக்குக் கேட்காத வகையில் என்னுடன் எக்காரணம் கொண்டும் கதைக்க வேண்டாம் என மெல்லிய குரலில் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்து நின்று கொண்டேன். அது அவர்களுக்கு ஏமாற்றமளிப்பதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

அவர்களிடம் அப்படிச் சொன்ன பின்னரும் எனக்குள் ஒரு சந்தேகம் முளைத்தது. சில வேளைகளில் புலிகள் திட்டமிட்டே அவர்களை நான் இருக்கும் சிறைக்குள் அனுப்பி வைத்துவிட்டு, நாங்கள் ஒருவருக்கொருவர் கதைத்துத் தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறோமா என அவதானிக்கக்கூடும் என நினைத்தேன். எனவே நான் ஒரு தந்திரத்தைக் கைக்கொண்டேன். வாசலில் காவலுக்கு நிற்கும் ஆதவன் என்ற புலியைக் கூப்பிட்டு, "நான் காந்தி அண்ணையை அவசரமாகச் சந்திக்க வேணும். சந்திக்க முடியுமா?" எனக் கேட்டேன். அவன் கேட்டுச் சொல்வதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து இன்னொரு புலி வந்து காந்தி என்னைக் கூப்பிடுவதாகச் சொல்லி அழைத்துச் சென்றான். காந்தியின் முன்னால் சென்றதும் "என்ன விசயம்?" என என்னை வினவினான். நான் அவனிடம் எனக்குத் தெரிந்த இருவர் நான் இருக்கும் சிறைக்குள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள் என்ற விடயத்தை அவனிடம் சொன்னேன். அவன்

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஒரு விசமப் சிரிப்புடன், "அப்ப அவையளோடை எல்லா விசயமும் கதைச்சு முடிச்சிட்டியா?" என வினவினான். நான் உடனும் "இல்லை...இல்லை அவர்கள் வந்து நிண்டதை நான் கண்டேன். அவர்கள் என்னைக் கண்டார்களோ தெரியாது" என அவசரமாகப் பதிலளித்தேன். "சரி நீ போ" என காந்தி என்னை அனுப்பி வைத்தான்.

சிறிது நேரம் கழித்து ஒரு புலி உறுப்பினன் வந்து இரத்தினத்தைக் கூப்பிட்டு அழைத்துச் சென்று, எமது அறைக்குப் பக்கவாட்டில் இருந்த இன்னொரு சிறைக்குள் தள்ளிவிட்டான். அந்த அறைக்குள்தான் நான் இங்கு வந்த புதிதில் தில்லையைக் கண்டிருந்தேன். இராசமூர்த்தியின் மகன் எனது சிறைக்குள்ளேயே தங்க விடப்பட்டிருந்தான்.

காலை 9 மணியானதும் புலிகளின் புலனாய்வு விசாரணையாளர்கள் சிறைக்கு அருகில் வந்து விசாரணைக்கு உரியவர்களை அழைத்துச் செல்வது வழமை. எமது சிறைக்கு முன்பக்கமாக பக்கவாட்டில் உள்ள கைதிகளும், பின்பக்கமாக அதே பக்கவாட்டில் உள்ள கைதிகளும் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்படும் போது அவர்களை நாம் நன்கு பார்க்க முடியும்.

தோழர் இரத்தினமும், தோழர் இராசமூர்த்தியின் மகனும் வந்த பின்னர், சிறைக்குள் இருந்த எனக்கு நம்பிக்கையான கைதிகள் மூலமாக அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்பதை அறிய முயன்றேன். ஏனெனில் அவர்கள் கைதிற்கான காரணத்தை அறிந்தால், வெளியில் என்ன நடக்கிறது என்பதையும், இன்னமும் எமது தோழர்கள் பலர் கைது செய்யப்படக் கூடுமா என்பதையும் தெரிந்து கொள்ள முடியும் என எண்ணினேன். ஆனால் இராசமூர்த்தியின் மகனிடமிருந்து எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவனும் இயக்கத்தில் இருந்தவனில்லையா? அங்குள்ளவர்களிடம் தான் கைதான காரணத்தைச் சொல்லப்போய், அது புலிகளுக்குத் தெரிந்தால் தனக்கு என்ன நடக்கும் என்பதை அவன் அறியாதவன் இல்லையே? பாம்பின் காலைப் பாம்பு அறியாமலா இருக்கும்?

இவர்கள் இருவரும் சிறைக்குக் கொண்டு வரப்பட்டு சில நாட்களின் பின்னர், ஒரு காலை நேரம் நான் எனது சிறையின் உள்ளே பின்புறமாக நின்று கொண்டிருக்கையில், பின்பக்கமிருந்த சிறைக்குள்ளிருந்து தோழர் இராசமூர்த்தியை ஒரு புலி உறுப்பினன் வெளியே கூட்டிச் செல்வதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். தற்செயலாக இந்தப் பக்கம் பார்த்த இராசமூர்த்தியும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார். அவரது மகன் மட்டுமின்றி, அவரும் அங்கு கொண்டு வரப்பட்டிருப்பதால், ஏதோ மகன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கக்கூடும் என எண்ணினேன். அதற்கு ஏன் இரத்தினத்தையும் கூட்டி வந்திருக்கிறார்கள் என்பது புரியவில்லை. ஆனால் இரத்தினமும் இராசமூர்த்தியும் நெருக்கமான தோழர்கள் என்றபடியால், இவர்கள் மூவரும் ஏதோ ஒரு பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என நினைத்தேன்.

இன்னும் சில தோழர்கள் அடுத்து வர இருக்கிறார்கள் என்ற விடயமோ, எனது விசாரணை வில்லங்கமான ஒரு உச்ச நிலையை அடையப் போகிறது என்ற விடயமோ அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

தொடரும்

முன்னைய பதிவுகள்